இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE, No. 6,134, AUGUST 3, 1906.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Notification regarding Civil Procedure for Village Tribunals.]

விளம்பரம்

இத்தாற் சகலரும் அறியும்படி விளம்பரப்படுத்துவதாவது:—உத்தம தேசாதிபதியவர்கள், ௧௮௮௯ ம் ஆண்டின் கிராமச்சங்கச்சட்டத்தின் ௬௦ ம் பிரிவினால் தம்மிடம் வைத்த அதிகாரங்களை உத்தியோகித்துச் செலுத்தியும், அதிகார மந்திரசபையாரது சம்மதியோடும், கிராமக்கோட்டார்கள் சிவில் வழக்கு நடப்பிக்கும் முறைமையிற் கைக்கொண்டொழுகும்படியாக, பின்வரும் விதிகளை ஏற்படுத்தச் சித்தமாயினார்கள்.

உத்தமனாரது கட்டளைப்படி,

எச். எல். கிறூவோட்,
அக்டிங் கொலோனியல் சக்கிறத்தார்.

கொழும்பு, கொலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
௧௯௦௬ ம் ௵ ஆகஸ்ற் (ஆவணி)மீ ௩ ௳.

---

## கிராமக்கோடுகளிற் சிவில் வழக்கு நடத்தும் முறையாகிய கிராமக்கோட்டுச் சிவில வியவகார விதிகள்.

### I. வழக்கு வைக்கும்போது நடபடிக்கைகள்.

1. எவனொருவனாயினும், மற்று ஒருவனாவது பலராவது செய்த செய்கையினாலேனுஞ் செய்யாது விட்டமையினாலேனுந் தனக்கு நேர்ந்த யாதுமொரு தீங்கு அல்லது நஷ்டமாகிய காரியத்தில், கிராமக்கோட்டாரிடத்தே குறைவேண்டி நிற்பானாகில்; அவன் தனக்குள்ள வழக்குக்காரியம் இன்னதென்று நீதவானரிடத்தே போய்ச் சொல்லிக்கொள்ளலாம்; அந்த நீதவானர் அதை முறைப்பாடாக ஏற்றுப் புறம்பானதொரு கடுதாசித்தாளிலே எழுதிவைத்துக்கொள்ளல் வேண்டும்.

2. வழக்காளி எதிரியாகிய இருதிறத்தவர்கள், வழக்காளி பக்கத்துச் சாட்சிக்காரர்கள், என்பவர்களுடைய பேர்களையும், உறைவிடங்களையும், ஏற்படுத்த எண்ணிய வழக்கினது பொழிப்பையும், நீதவானர் எழுதிவைத்துக்கொள்ளல் வேண்டும்.

3. அவ்வித முறைப்பாடு ஒவ்வொன்றும், நீதவானர் எழுதிவைத்துக்கொண்ட அவ்வம்முறையாக இலக்கமிடப்பட்டு, வழக்கினது தொடக்கமாகவும், அதைப்பற்றிய தினசரிப் புத்தகத்தினது தொடக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

4. அவ்வித முறைப்பாட்டை முன்சொன்னபடி எழுதிவைத்துக்கொண்ட அளவில், எதிரி வந்து வெளிப்படும்படி நீதவானர் ஒரு நாள் நியமித்து, அதை வழக்காளிக்கும் அறிவித்துவிட்டு, வழக்குப் புத்தகத்தில் எழுதிக்கொள்ளல் வேண்டும்; மேலும் அவர், எதிரிவந்து வெளிப்படும்படியாக, இருதிறத்தாருடைய பேர்களையும் உறைவிடங்களையும் வழக்கின் இலக்கத்தையும் பொழிப்பையுங் காட்டி யெழுதியிருப்பதொரு சம்மன்ஸ் சித்தாசியும் விடுத்தல் வேண்டும்; அவ்வித சம்மன்ஸ் சித்தாசி யொவ்வொன்றும் இதனோடு அணைத்திருக்கும் மாதிரித்தாள் அட்டவணையிலுள்ள A. அக்ஷரமிட்ட மாதிரியாயிருத்தல் வேண்டும்.

5. வழக்காளியினது வேண்டுகோளின்படி அவ்வித சாட்சிக்காரர்களுக்காவது அவர்களுள் எவருக்குமாவது, நீதவானர் சம்மன்ஸ் சித்தாசிவிட்டு, அதிற் குறித்திருக்குந் தேதி நாளில் வந்து வெளிப்பட்டுச் சாட்சியஞ்சொல்லும்படி அவர்களைக் கேட்கலாம்.

### II. புறோசெஸ் சித்தாசி.

6. சம்மன்ஸ் சித்தாசிகளும் மற்றைப் புறோசெஸ் சித்தாசிகளுமெல்லாம் வழக்கமாகக் கிராமத்துத் தலைமைக்காரர்களுக்கு மேல்விலாசமிட்டு அனுப்பப்படுதல் வேண்டும்; ஆயினும், அவ்வித சம்மன்ஸ் சித்தாசியாவது புறோசெஸ் சித்தாசியாவது பிசுக்காலுக்கேனும் மற்று எவரொருவருக்கேனும் மேல்விலாசமிட்டு அனுப்பிவைப்பதனால் அது அதிக வசதியாகவும் விரைவாகவுஞ் சேர்ப்பிக்கப்படலாகுமென்று நீதவானர் திருப்திப்பட்டுக்கொண்டாராகில், அவர் அந்தப் பிசுக்காலுக்காவது மற்ற அவருக்காவது அப்படி அனுப்பிவைக்கலாம்.

7. அவ்வித சம்மன்ஸ் சித்தாசியையாவது மற்றைப் புறோசெஸ் சித்தாசியையாவது அதிற் சொல்லியிருக்கும் ஆளிடத்தே அதின் கொப்பிப்பிரதியைக் கொடுத்து நேரே முகமுகமாகச் சேர்த்துவிடல் வேண்டும்; அவ்விதம் அதைச் சேர்த்துவிட்டதை அறிக்கைபண்ணுதலாவது, அந்தச் சம்மன்ஸ் சித்தாசியிலாவது மற்றைப் புறோசெஸ் சித்தாசியிலாவது மாட்டெறிந் தெழுதப்படுதலாலேனும் அதனுடன் அணைக்கப்படுதலாலேனுஞ் செய்யப்படல் வேண்டும். புறனடை: ஆயினும், வழக்குவைக்கப்பட்ட அந்த நாளிலே இருதிறத்தவர்களும் வந்திருந்து ஆயத்தமாயும் இருப்பார்களாகில், நீதவானர் உடனே வழக்கை விளங்கத் தொடங்கலாம்; அப்படி நடக்கும்பட்சத்தில் வழக்குக்காரியத்தினது பொழிப்பை நீதவானர் எதிரிக்கு விளங்கப்படுத்திக்கொண்டால் அது போதியதாயிருக்கும்; ஒரு சம்மன்ஸ் சித்தாசியை எழுதி அவ்வெதிரியிடத்தே சேர்ப்பிப்பது அவசியமாயிருக்கமாட்டாது.

### III. கோட்டுமுன்னிலையில் வந்து வெளிப்பட்டபோது நடபடிக்கைகள்.

8. சம்மன்ஸ் சித்தாசியிற் சொன்ன நாளிலே இருதிறத்தார்களும் வந்து வெளிப்பட்டார்களாகில், நீதவானருஞ் சங்கத்தவர்களும், கிராமச்சங்கச்சட்டத்தின் ௩௦ ம் பிரிவில் விதித்தபிரகாரம், அவர்கள் வழக்கை இணங்கிக்கொள்ளும்படி செய்யப் பிரயாசப்படுதல் வேண்டும்.

9. ௧௮௯௫ ம் ஆண்டின் ௯ ம் இலக்கச் சட்டத்தில் ஏற்படுத்திய பிரகாரம், சத்தியம்பண்ணியாவது உறுதிப்பாடு பண்ணியாவது வழக்கைத் தீர்த்துக்கொள்ளுவது இருதிறத்தவர்களுக்கும் ஒத்த சம்மதமேயாகில், நீதவானுர் அந்தச் சட்டப்பிரகாரம் நடப்பிக்கத் தொடங்கலாம்.

10. எதிரியானவன் வழக்காளி கேட்கும் உரித்துக்கேள்வியை ஒப்புக்கொண்டானுகில், நீதவானுர், அவன் அப்படி ஒப்புக்கொண்டதை இதனோடு அணைத்திருக்கும் மாதிரித்தாள் அட்டவணையிற் C அக்ஷரமிட்ட மாதிரியில் றெக்காட் பதிவிற் சேர்த்து எழுதிக்கொண்டு, அதற்கு எதிரியைக்கொண்டு கையொப்பமிடுவித்தல் வேண்டும்.

11. எதிரியானவன் அவ்வுரித்துக்கேள்வியை எதிர் மறுத்தாலும், திறத்தார்களை இணங்கச்செய்வது முடியாது போனாலும், அவ்வுரித்துக் கேள்விக்கு உத்தரஞ்சொல்லும்படி எதிரியைக் கேட்டல் வேண்டும், அவ்வெதிரியுந் தன் உத்தரத்தை நீதவானுரிடத்திற் சொல்லல் வேண்டும்; அவரும் அவ்வுத்தரத்தின் மொழிப்பை றெக்காட் பதிவில் எழுதிக்கொள்ளல் வேண்டும். அவனுக்குச் சாட்சிக்காரர் யாரும் உண்டு ஆனாலும் அவர்கள் அங்கு வந்துநின்றாலும், உடனுனே நீதவானுர் வழக்கை வளங்கத் தொடங்கலாம். ஆயினும், அவ்வித சாட்சிக்காரர்கள் அங்கு வந்திருக்கவில்லையாகில், நீதவானுர் விளக்கத்தைத் தவணைபோட்டு வைக்கலாம்; இன்னும் அவர் அவசியமாகில், எதிரி கூப்பிட விரும்புஞ் சாட்சிக்காரர்கள் எவர்களுக்குஞ் சம்மன்ஸ் சித்தாசி முடித்து அனுப்புதல் வேண்டும்.

12. நீதவானுர், வழக்கு விளக்கத்துக்காகத் தாம் தவணைபோட்டு வைத்திருக்குந் தேதி இன்னது என்று வழக்காளிக்கும் அவன் பக்கத்துச் சாக்ஷிக்காரர் யாரும் வந்திருந்தால் அவர்களுக்கும், அப்போதே வாய்மொழியால் அறிவித்துவிடல் வேண்டும்; அதற்கிடையில் வழக்காளி அவ்வழக்கை நடத்தாமல் விட்டுப்போட்டு, அப்படி விட்டுப்போட்டதை அவன் தங்களுக்கு அறிவித்திருந்தாலன்றி அந்தத் தேதியிற் கோட்டுக்குவந்து சேர்வது அந்தச் சாட்சிக்காரர்களுக்குக் கடமையாயிருக்கும்.

13. கிராமக்கோட்டார் ஆனவர், விளக்கம் நடந்தபோதாவது அதற்கு முன்பாவது, இருதிறத்தார்களில் ஒருவரது மனுக்கேள்விப்படியும், கோட்டாராகிய தாம் நியாயமானவை என்றெண்ணும் அவ்வித ஏற்பாடுகளின்படியும், வழக்காளியாகவோ எதிரியாகவோ சரியீனமாகச் சேர்க்கப்பட்ட எத்திறத்தவரது பெயரையுந் நீக்கி விலக்கிவிடும்படி, கட்டளை பண்ணலாம்; இன்னும் அக்கிராமக்கோட்டார் அவ்வித மனுக்கேட்கப்படினுமாக கேட்காது விடப்படினுமாக கோட்டாராகிய தாம் நியாயமென்றெண்ணும் அவ்வித ஏற்பாடுகளின்படியும் வழக்காளியெவனையும் எதிரியாக்கிக்கொள்ளவும் அல்லது எதிரியெவனையும் வழக்காளியாக்கிக்கொள்ளவும், வழக்காளியாகவோ எதிரியாகவோ சேர்த்திருக்கப்பட வேண்டியவனுயேனும், அவ்வழக்கிற் சம்பந்தப்பட்ட காரியங்களை யெல்லாஞ் செவ்வையாகவும் பூரணமாகவுந் தீர்த்து முடிவுகட்டுதலிற் கிராமக்கோட்டாராகிய தாம் வல்லராம் வண்ணஞ் செய்தற்குக் கோட்டு முன்னிலையில் வந்து வெளிப்படல் வேண்டும் அவசியங்கொண்டவனுயேனும், உள்ள எவனொருவனது பெயரையும் அவ்வழக்கிற் சேர்த்துக்கொள்ளவும், எப்போதாயினுங் கட்டளைபண்ணலாம். ஒருதிறத்துக்கு ஒருவனைச் சேர்க்கும் பக்ஷத்தில், அப்படிச் சேர்க்கப்பட்டவனை அல்லது சேர்க்கப்பட்டவர்களை, புறசெல் சித்தாசுகள் எல்லாவற்றிலும், அக்கட்டளைபண்ணிய தேதிக்குப்பின் றெக்காட பதிவில் எழுதப்படுபவைகளிலும், "சேர்க்கப்பட்ட திறத்தான்" என்ற பெயரினுற் சொல்லப்படல் வேண்டும்.

## IV. கோட்டு முன்னிலையில் வந்து வெளிப்படாதபோது நடபடிக்கைகள்.

14. சம்மன்ஸ் சித்தாசி திரும்பிறெண் அறிக்கைபண்ணப்படவேண்டிய தேதி நாளிலேயாவது வழக்கு விளங்க நியமித்த எந்தத் தேதி நாளிலேயாவது, வழக்காளி வந்து வெளிப்படாமலேனும், தான் வராததிற்குப் போதிய காரணங்காட்டாமலேனும் இருக்கப்பெற்றால், அவ்வழக்குத் தள்ளுண்டுபடல் வேண்டும்.

(1) புறனடை: ஆயினும், எதிரிவந்து வெளிப்பட்டு அவ்வழக்கினது உரித்துக்கேள்வியை ஒப்புக்கொள்ளுவானுகில், வழக்காளிதான் வந்து வெளிப்படாதிருந்தபோதிலும், அவ்வழக்காளி பக்ஷத்துக்கு நீதவானுர் தீர்ப்பு எழுதிக்கொள்ளலாம்.

(2) மேலும் ஒரு புறனடை: ஆயினும், வழக்காளியானவன் தான் வராமல் தடைப்படுத்தப்பட்டது அபாயத்தினுலேனும் ஆபத்தினுலேனும் என்று பின்பு நீதவானுருக்குத் திருப்தியுண்டாகக் காட்டுவானேயாகில், வழக்குத் தள்ளப்பட்ட கட்டளையை அழித்துமாற்றிவிடுவதும், தள்ளுப்பாட்டுக் கட்டளைபண்ணின அன்றையத்தினத்திலே எதிரி கோட்டுக்கு வருவதற்குப் பிடித்த நியாயமான செலவுகளெவற்றையும் முன்னேற இறுத்துவிடல், வழக்கு விசாரணையாகும்படி உத்தரவுபண்ணுவதும், நீதவானுருக்குத் தகுதியாயிருக்கும்.

15. சம்மன்ஸ் சித்தாசி திரும்பிறெண் அறிக்கைபண்ணப்படவேண்டிய தேதியிலாவது வழக்கு விளக்கத்துக்குவைத்த எந்தக் தேதியிலாவது எதிரிவந்து வெளிப்படாமலேனும் வந்து வெளிப்படாமைக்குக் காரணங்காட்டாமலேனும் இருப்பானுகில், நீதவானுனவர், அப்படி அவன் வந்து வெளிப்படுதற்காக விடுத்த சம்மன்ஸ் சித்தாசியோ நொத்தீஸ் அறிவித்தலோ கட்டளையோ அவனிடஞ் சேர்ப்பிக்கப்பட்டதென்பது எண்பிக்கப்பட்ட அளவில், எதிரிக்கு மாறாக அவன் வராத்தவறினைபற்றித் தீர்ப்பு எழுதவிடலாம்.

புறனடை: ஆயினும், காணிபூமியைப்பற்றிய உரித்தேனும் பாத்தியமேனும் ஆட்சிக்குரிமையேனும் வழக்காயிருக்குஞ் சகல வழக்குக்களிலும் சாட்சியங்கேட்டல் அவசியமென்றாவது உசிதமென்றாவது நீதவானுர் கருதுகிற மற்றெந்த வழக்குக்களிலும், அவர் அவ்வித சாட்சியங்கேட்டபின்னன்றித் தீர்ப்பு எழுதிக்கொள்ளப்படாது; மேலும் அவர் எதிரிகோட்டுக்கு வராத்தவறின காரணத்தைப்பற்றியல்ல, நீதிமுறைக்கு வேண்டிய வழக்கின் பலாபலத்தைக்கொண்டே, தீர்ப்புக் கொடுத்தல் வேண்டும்.

16. ஆயினும் எதிரியானவன், அவ்வித தீர்ப்பேனுங் கட்டளையேனுங் கொடுத்தபின் ஒரு நியாயமான காலத்தினுள்ளே பின்வருமாறு நீதவானுர்க்குத் திருப்திவரப் பண்ணுவானுகில்; அதாவது: தான் வராமல் தடைப்பட்டதற்குக் காரணம் அபாயம் அல்லது ஆபத்து என்றும், அல்லது அவ்வழக்கு நடபடிக்கையைப்பற்றிப் போதியளவு அறிவித்தல் தனக்குக் கிடையாமையென்றும், சம்மன்ஸ் சித்தாசியையாவது நொத்தீஸ் அறிவித்தலையாவது தன்னிடஞ் சேர்ப்பிக்க ஒட்டாதபடி தப்பிக்கொள்வதற்காகத் தான் வராமல் விடவில்லையென்றும், அவ் வழக்கின் பலாபலத்தைப்பற்றித் தன் பக்கத்துக்கு நல்ல பெலத்த நியாயமுண்டென்றும் காட்டுவானேயாகில்; நீதவானுர் அவ்விதத் தீர்ப்பையும் அல்லது கட்டளையையும் அதுபற்றி நடந்த நடபடிக்கைகளையும் விலக்கிவைத்துவிட்டு; வழக்காளிக்கு அறிவித்துவிட்டும், அந்தத் தீர்ப்பையேனுங் கட்டளையையேனுங் கொடுத்த அன்றைத் தினத்தில் வழக்காளி கோட்டுக்கு வருவதற்குப் பிடித்த நியாயமான செலவுகளெவற்றையும் எதிரியைக்கொண்டு கொடுப்பித்து விட்டும், தன் வழக்கைப் பேசிக்கொள்ளும்படி அவ்வெதிரிக்கு இடங்கொடுக்கலாம்.

## V. வழக்கு விசாரணை.

17. நீதவானுர் நடபடிக்கைகளெல்லாவற்றையும் எழுதி றெக்காட் பதிவொன்று வைத்துக்கொள்ளல் வேண்டும்; இன்னும் அவர், இருதிறத்தார்களுஞ் சாக்ஷிக்காரர்களும் சத்தியம்பண்ணியோ உறுதிப்பாடுபண்ணியோ சொன்ன சாட்சியத்தை இயன்றளவு சுருக்கமாக றெக்காட்பதிவில் எழுதிவைத்துக்கொள்ளல் வேண்டும். நீதவானுர் சங்கத்தவர்களது அபிப்பிராயத்தை றெக்காட் பதிவில் எழுதிவைத்துக்கொள்ளல் வேண்டும்; அவர்களும் அதற்குக் கையொப்பமிடல் வேண்டும்; ௩௦ ம் பிரிவில் நியமித்த பிரகாரம் தாமும் தமது தீர்ப்பை றெக்காட் பதிவில் எழுதிக்கொண்டு, இருதிறத்தவர்கள் முன்னிலையிற் கோட்டிலே வெளியாக அதைச்சொல்லிவிட்டு, அந்தத் தீர்ப்புக்குத் தமது கையொப்பமுந் தேதியும் இட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

(1) புறனடை: ஆயினும், நீதவானுரேனுஞ் சங்கத்தவர்களேனும், வழக்காடப்படுங் காணியையாவது பொருள் பண்டத்தையாவது நீதவானுர் அல்லது கோட்டார் பார்வையிடுவது புத்தியாகும் அல்லது அவசியமாகுமென்று கொள்வார்களாகில்; அவ்வித பார்வையிடு முடியும் வரைக்கும் வழக்கு விளங்குவதை அல்லது கடைசித் தீர்ப்புச் சொல்வதை நீதவானுர் பின்போட்டுவைக்கலாம்.

18. வழக்குக்களை விளங்குவதற்காக நீதவானுரோடு சேர்க்கப்படுஞ் சங்கத்தார் ஒவ்வொருவரும், தமது உத்தியோகக் கடமைகளைச் செலுத்தத் தொடங்குமுன்னமே, L அக்ஷரமிட்ட மாதிரியிற் சத்தியம்பண்ணிக் கையொப்பமிட்டுக்கொள்ளல் வேண்டும்.

## VI. தவணைகள் போட்டுவைத்தல்.

19. எவனாயினுமொரு பிரதான சாட்சிக்காரன் (கபடமாயொத்துக்கொண்டு மறிக்கப்பட்டிராமல் மற்றும் வகையில்) வராமை பற்றியேனும் வேறு போதிய காரணம்பற்றியேனும் இருதிறத்தவர்களில் ஒருவர் வழக்கு விளக்கம் நடத்த ஆயத்தமாயிருக்கவில்லையென்பது நீதவானுக்குத் திருப்தியாய் போதெலாம், காரியநிர்வாகங்கள் ஆவசியமாக்குகிற அவ்வித ஏற்பாடுகளின்படியும், ஒரு முறைக்காயினும் பலமுறைக்காயினும், வழக்கு விசாரணையைத் தவணைபோட்டு நிறுத்திவைப்பது அந்த நீதவானுக்கு நியாயமுறையாகும். புறனடை: அப்படித்தானாயினும், எப்படியும், நீதவானுக்கு தகுதியென்று காணில், வந்து நிற்குஞ் சாட்சிக்காரர்களெவரிடத்துஞ் சாட்சியங் கேட்டுக்கொண்டு, அவ்வித பிரதான சாட்சிக்காரனை வருவிக்கும் வரைக்கும் வழக்கை மேலும் விளங்குவதற்குத் தவணைபோட்டுவைக்கலாம்.

## VII. நானாவித விஷயங்கள்.

### (1) சமாதான இணக்கங்கள்.

20. இருதிறத்தவர்களுங் கிராமக்கோட்டார் முன்னிலையில் சமாதானமாகி இணங்கிக் கொள்ளப்பெற்றபோதெல்லாம், அவ்வித இணக்கத்தின் ஏற்பாடுகளை வழக்குப் புத்தகத்தில் எழுதிப் பதிந்துகொள்வது நீதவானது கடமையாயிருக்கும்; அவ்விதம் எழுத்திற் பதிந்துகொண்டதை இருதிறத்தவர்களுக்கும் விளங்கப்படுத்திவிட்டு, அவர்களைக்கொண்டு அதற்குக் கையொப்பம் இடுவித்தல் வேண்டும்; அவ்வித இணக்கமொவ்வொன்றும் ஒரு தீர்ப்பினது வலுவுடையதாயிருக்கும்.

### (2) கிராமச்சங்கச் சட்டத்தின் உஅ ம் பிரிவின்படி நியாயாதிக்கம்.

21. கிராமச்சங்கத்தவர்களாற் சாதாரணமாக விளங்கப்படக்கூடாத வழக்குகளில் நியாயாதிக்கங் கொடுப்பதாகிய கிராமச்சங்கச் சட்டத்து உஅ ம் பிரிவின் (உ) ம் கீழ்ப்பிரிவின்படி இருதிறத்தவரும் தாம் ஒருமித்த சம்மதத்தை வெளிப்படுத்தும் பத்திரமொவ்வொன்றும், இதனோடு அணைத்திருக்கும் மாதிரித்தான் அட்டவணையில் D. அக்ஷரமிட்ட மாதிரியினது மொழிப்புடையதாயிருத்தல் வேண்டும். இருதிறத்தவர்களும் அவ்விதம் சம்மதித்துக்கொண்டமைபற்றி கிராமக்கோட்டாரது நியாயாதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்படுமேயாகில், அக்கிராமக்கோட்டாருக்குத் தக்க காரணங் காட்டி அவரது உத்தரவு பெற்றன்றி, அவ்வழக்கை அவ்வாதிக்கத்தினின்றும் வாங்கியெடுத்துவிடப்படாது.

(1) புறனடை: ஆயினும், இருதிறத்தவர்களுஞ் சமாதானமாய் இணங்கிக்கொண்டபோது, அவ்வித வழக்கை வாங்கியெடுத்துவிடும்படி கிராமக்கோட்டார் உத்தரவுகொடுக்கலாம்.

(2) மேலும் ஒரு புறனடை: ஆயினும், அவ்வித சமாதான இணக்கமொன்று உ௦ ம் விதியின்படி றெக்காட் பதிவில் எழுதக்கொள்ளப்பட்ட போதெல்லாம், அந்தக் காரணத்தையே பற்றிய வழக்கை மேற்கொட்டிலே ஏற்படுத்தாதபடி அவ்விருதிறத்தார்களையுந் தடைப்படுத்திவிடல் வேண்டும்.

22. ஒரு திறத்தவர் நீதவானுக்கு முன் வந்து வெளிப்பட்டுக் கிராமசங்கச்சட்டத்து உஅ ம் பிரிவின் (உ) ம் கீழ்ப் பிரிவிற்கமைய ஒரு வழக்குத்தொடர விருப்பங்கொண்டிருக்குமிடத்து, அவ்வழக்கில் எதிரியாக்கப்பட வேண்டியவன் சம்மதபத்திரத்துக்குக் கையொப்பம்வைக்க வந்திருக்கவில்லையாகில், அவன் அல்லது அவர்கள் அவ்வித சம்மத பத்திரத்துக்குக் கையொப்பம்வைப்பது தனக்கு அல்லது தங்களுக்குப் பிரியமாமோ என்பதை அவனிடத்தே அல்லது அவர்களிடத்தே கேட்டறியும்பொருட்டுக் கிராமக்கோட்டாருக்கு முன் வந்து வெளிப்படல் வேண்டுமென்று அவனுக்கு அல்லது அவர்களுக்கு ஒரு நொத்தீஸ் அறிவித்தல் அனுப்பிவைப்பது நீதவானுக்கு நியாயமுறையாயிருக்கும்; அவ்வித நொத்தீஸ் அறிவித்தலானது சம்மன்ஸ் சித்தாசி மாதிரியாயிருத்தல் வேண்டும்.

### (3) றெக்காட் பதிவுகள் (வழக்குப் புத்தகம்).

23. நீதவானர், இதனோடு அணைத்திருக்கும் J அக்ஷரமிட்ட மாதிரியில் வழக்குக்களின் பதிவுப்புத்தகமொன்றும், K அக்ஷரமிட்ட மாதிரியில் வழக்குச் சுருக்கமொன்றும் வைத்திருத்தல் வேண்டும்; இன்னும் அவர், அந்த மாசத்து வழக்குச் சுருக்கத்தின் கொப்பிப் பிரதியை ஒவ்வொரு கிழமை முடிவிலுங் கவண்மேந்து ஏஜன்றருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(4) புறோசெஸ் சித்தாசியிலும், நடபடிக்கை ஜேணல் தினசரிப்பத்திரத்திலும், றெக்காட் பதிவுகளிலும் வழங்கப்படும் பாஷை.

24. புறோசெஸ் சித்தாசி மாதிரிகளெல்லாம், அவைகள் மேல்விலாசமிட்டு அனுப்பப்படு மவர்களுக்குத் தெரிந்ததாயும் அப்பகுதியிலாவது கீழ்ப்பகுதியிலாவது வழங்குவதாயும் உள்ள சுதேச பாஷையொன்றில் எழுதி முடிக்கப்படுதல் வேண்டும்; வழக்குப் பதவுகளும் நடபடிக்கை ஜேணல் தினசரிப்பதிவுகளும், சாட்சிய நினைவுக் குறிப்புக்களும், சங்கத்தவர்களுடைய அபிப்பிராயங்களும், தீர்ப்பும், கடைசி முடிவான தீர்ப்பும், இங்கிலீசிலாவது, இருதிறத்தவர்களாலாவது சாட்சிக்காரர் முதலானவர்களாலாவது பேசப்பட்டதாயும் அப்பிரிவிலேனும் கீழ்ப் பிரிவிலேனும் வழங்கப்படுவதாயும் கிராமக் கோட்டாருக்கு அதிகப் பயிற்சியுள்ளதுமாகிய சுதேச பாஷையிலாவது எழுதிவைப்பதும் பதிந்துகொள்வதுஞ் செய்யலாம்.

(1) புறனடை: ஆயினும், றெக்காட்பதிவு இங்கிலீசில் எழுதப்பட்டிருப்பின், அதில் ஒரு திறத்தவனாயுள்ளவனெவனும் அதினுள்ள நடபடிக்கைகளின் எந்தவொரு பாகத்தின் கொப்பிப்பிரதியையுங் கேட்பானாகில், அப்பாகத்தின் இங்கிலீஸ் மொழிபெயர்ப்பொன்றை, அதன்பொருட்டு யாதும் வேறு செலவு அவனிடங் கேளாமலே, பெற்றுக்கொள்ளும் உரிமையுடையவனாவன்.

(2) மேலும் ஒரு புறனடை: ஆயினும், சங்கத்தவர்களுடைய அபிப்பிராயங்கள் றெக்காட்பதிவில் இங்கிலீசில் எழுதிவைக்கப்பட்டிருந்தால், அவைகளுக்கு அவர்கள் கையொப்பம் இடுமுன்னமே, நீதவானர் அவ்வித சங்கத்தவர்களுக்கு அவர்கள் சொந்தப் பாஷையிலே அவ்வபிப்பிராயங்களை வாசித்துக்காட்டி விளங்கப்படுத்தல் வேண்டும்.

## VIII. அப்பீல் முறையீடு; பிணை.

25. இருதிறத்தவர்களில் எவனாயினுமொருவன் கிராமச்சங்கச்சட்டத்து ௩௨ ம் பிரிவின்படி கவண்மேந்து ஏஜன்றருக்காவது அதிகாரமந்திரசபையோடுகூடிய தேசாதிபதியவர்களுக்காவது கிராமக்கோட்டாரது எந்தத் தீர்ப்புக்கேனுங் கட்டளைக்கேனும் மாறாக அப்பீல் முறையீடு செய்திருக்கில்; அந்தத் தீர்ப்பேனுங் கட்டளையேனுஞ் செய்த நாண்முதற் பதினைந்து நாளைக்குள்ளே (கிராமக்கோட்டாரால் அங்கீகாரஞ் செய்யப்படவேண்டிய) ஒருவனைப் பிணையாகக்கொண்டாவது பிணையில்லாமலாவது கவண்மேந்து ஏஜன்றராவது அதிகார மந்திரசபையோடுகூடிய தேசாதிபதியவர்களாவது முடிவுசொலலும் அல்லது செய்யும் யாதொரு தீர்ப்பையேனுங் கட்டளையையேனும் முறைமையாக ஒப்பேற்றி முடிக்கும்பொருட்டு, ஒரு பிணைச்சீட்டு எழுதித்தரல் வேண்டுமென்று நீதவானர் அவனைக் கேட்கலாம்; மேலும், அப்பிணைச்சீட்டு இதனோடு அணைத்திருக்கும் மாதிரித்தான் அட்டவணையில் E அக்ஷரமிட்ட மாதிரியை முக்கியமானபடி ஒத்திருத்தல் வேண்டும்.

26. கவண்மேந்து ஏஜன்றராவது அதிகாரமந்திரசபையோடுகூடிய தேசாதிபதியவர்களாவது செய்த தீர்ப்பையேனுங் கட்டளையையேனும் முறைப்படி நிறைவேற்றுவித்தல் நீதவானரது கடமையாகும்.

27. உ௫ ம் விதியின் ஏற்பாடுகளின்படி வாங்கப்பட்ட யாதாயினுமொரு பிணையுறுதி பறிமுதலாக்கப்பட்டதென்று நீதவானருக்குத் திருப்திவர அத்தாட்சிப்பண்ணப்பட்ட போதெல்லாம், அவ்வித அத்தாட்சியின் காரணங்களை அவர் எழுதிப் பதிந்துகொள்ளுதல் வேண்டும்; மேலும் அவர் அவ்வித உறுதியாற் கட்டுப்பாடுபண்ணப்பட்ட எவனொருவனையும், அதனுவாகிய அபராதத்தொகையை இறுத்துப்போடும்படி, அல்லது அப்படி இறுக்காமல் விடுதற்கு ஏதுங் காரணமுண்டானால் அதனைக் காட்டும்படியாவது கேட்கலாம்; போதிய காரணங் காட்டாமலும் அபராதத் தொகையை இறுக்காமலும் இருந்தால், அப்படியானவனுக்கு உரியதாகிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை நடுக்கட்டி விற்பனவுசெய்யும்படி நீதவானர் தமது கைப்பட (=கையொப்பமிட்டு) ஒரு விறுந்துப் பத்திரமிட்டு அதை அறவாக்கத் தொடங்கலாம். அப்படியான விறுந்து அதை வெளிப்படுத்திய கிராமக்கோட்டினது நியாயாதிக்கமுடைய எல்லையி

னுள்ளே நிறைவேற்றப்படலாம்; மேலும் அதன் எல்லைக்குப்புறம்பே அப்படியானவனுக்குரிய யாதானுமொரு அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தையும், அவ்வித ஆதனங் காணப்பட்ட இடத் தெல்லையுள் நியாயதிக்கமுடைய கவன்மேந்து ஏஜன்றாவது கிராமக்கோட்டு நீதவானாவது அதில் மேலொப்பம் போட்டபோது, அவ்விருந்தானது அவசர வெவியாததாகப் பிடித்து விற்கவும் அதிகாரங் கொடுப்பதாகும்.

நீதவானவர், தமது நல்லெண்ணப்படி, அபராதத்தின் யாதொரு பாகத்தை விலக்கிவிடுதலும், ஒரு பாகத்தை இறுக்கும்படி கட்டாயம்பண்ணுதலும் செய்யலாம்.

## IX. அல்கின் வெவியாதது.

28. வழக்கிற் சித்திபெற்றவன், கிராமக்கோட்டினர் கடைசித் தீர்ப்பு அல்லது கட்டளைகொடுத்த தேதி முதலாக ஒரு வருஷமும் ஒரு நாளுமாகிய காலத்தினுள்ளே எப்போதாயினும் அல்லது அப்பீல் முறையிடுசெய்யப்பட்டதாகில், அவ்வப்பீலது தீர்ப்பு அல்லது கட்டளை தனக்குச் சேர்பிக்கப்பட்ட தேதி முதலாக ஒரு வருஷமும் ஒரு நாளுமாகிய காலத்தினுள்ளே எப்போதாயினும், (F. அக்ஷரமிட்ட மாதிரி) வெவியாத்து முடித்துப் பிசுக்காலுக்கு அனுப்பிவைக்கும்படி நீதவானிடத்தே மனுக்கேட்டுக்கொள்ளலாம்.

புறனடை: ஆயினும், கடைசித்தீர்ப்பு அல்லது கட்டளைகொடுத்த தேதி முதலாக ஒரு வருஷமும் ஒரு நாளுமாகிய காலத்தினுள்ளே வெவியாத்துவிடும்படி மனுக்கேட்டு, அத்தொகை அறவாக்கப்படாமல் வெவியாத்தைத் திருப்பி யனுப்பியிருந்தால், வெவியாத்து விடும்படி ஒரு முறையாவது பலமுறையாவது புதுக்க மனுக்கேட்கலாம்; ஆயினும் வழக்குத் தீர்ப்பினது அல்லது அப்பீலின் கடைசிக் கட்டளையின் தேதி முதல் ஒரு வருஷமும் ஒரு நாளும் சென்றுவிட்டபின் வெவியாத்து முடித்துக்கொடுக்கப்படாது.

29. அவ்வித மனுக்கேள்வியொவ்வொன்றும் எழுதப்பட்டதாயும், மனுக்கேள்விக்காரனாற் கையொப்பமிடப்பட்டதாயும், பின்வரும் விவரங்களைக் கொண்டிருப்பதாயும் இருத்தல் வேண்டும் :—

(a) வழக்கின் நம்பர் இலக்கம் ;
(b) இருதிறத்தார்கள் பெயர்கள் ;
(c) தீர்ப்பினது தேதி ;
(d) தீர்ப்புக்கு மாறாக ஏதும் அப்பீல் முறையிடு செய்ததுண்டோ ;
(e) தீர்ப்பின்படிக்குச் செல்லவேண்டியதும், வட்டியுண்டானால் அதனோடும் அல்லது அத்தீர்ப்பு வேறு சகாயங் கொடுத்திருப்பின் அதனோடுஞ் சேர்ந்ததுமாகிய கடனது அல்லது பிரதிபலனது தொகை ;
(f) ஏதுஞ் செலவுகொடுக்கும்படி தீர்ந்திருந்தால் அதன் தொகை ;
(g) தீர்ப்பு எவனுக்கு மாறாக வலியுறுத்தப்படல் வேண்டுமென்று கேட்கப்படுகின்றதோ, அவனது பெயர்.

30. வெவியாத்துவிடும்படி மனுக்கேள்வி கிடைத்த அளவில், நீதவானவர், அவசியமாகில், அது சரியானதோ என்று றெக்காட பதிவைப் பார்த்துத் தாந் திருப்திப்பட்டுக்கொண்டபின், இத்தோடு காட்டியிருக்கும் அட்டவணையிற் காட்டியிருக்கும் F அக்ஷரமிட்ட மாதிரியில் ஒரு வெவியாத்துக்குத் தாங் கையொப்பமிட்டுப் பிசுக்காலுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

31. வெவியாத்துக் கிடைத்த அளவில், பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது வேறு உத்தியோகஸ்தராவது, கடன்பட்டவன் பிசுக்கால் அல்லது டெப்பியூற்றிப் பிசுக்கால் கந்தோரிலிருந்து ஐந்து மைல் தூரத்தினுள்ளே வாசம்பண்ணுகிறவனாகில், அது தம்மிடத்தே சேர்க்கப்பட்டு நாற்பத்தெட்டு மணி நேரத்தினுள்ளும், ஐந்து மைலுக்கப்பால் வாசம்பண்ணுகிறவனாகில், ஐவைந்து மைல் தூரத்துக்கு அல்லது அதன் ஒரு பாகத்தின் தூரத்துக்கு மேற்கொண்டு நாற்பத்தெட்டு மணிநேரத்தினுள்ளும், அவன் குடியிருக்கும் வீட்டுக்கு அல்லது உறைவிடத்துக்குப்போய், அவன் அங்கே இருந்தால், அவனைக்கண்டு வெவியாத்திற் சொன்ன தொகையை இறுத்துப்போடும்படி கேட்டல் வேண்டும். கடன்பட்டவன் அங்குச் சமுகமாயிராமைபற்றிப் பணத்தொகையை இறுக்கும்படி கேட்கவில்லையாகிலும், கேட்டபோது அவ்வித எத்தக் கேள்விப்படியும் பணம் இறுக்கவில்லையாகிலும், பிசுக்காலானவர் தீர்க்கப்பட்ட கடனாளி அதற்காகக் காட்டித்தந்து ஒப்படைக்கும் உரித்தாடப்படாத ஆதனத்தை, அல்லது அது தவறில், தீர்ப்புப்பெற்ற கடன்கொடுத்தோன் காட்டிக்கொடுக்கும் அக்கடனாளியது அவ்வித ஆதனத்தை, அல்லது வெவியாத்திற் குறித்துச் சொல்லியிருக்கும் அவ்வித ஆதனத்தை பிடித்தெடுக்கவும் விற்பனவாக்கவும், அல்லது வேறு வகையிற் பணமாக்கவுந் தொடங்கலாம்.

32. கடன்பட்டவனுக்குரிய அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள், சொந்தப்பேரில் உள்ளவைகளானாலுஞ்சரி, அவனுக்காக அல்லது அவன் பொருட்டாக நம்பிக்கைக்கு வேறொருவன் வைத்திருந்தாலுஞ்சரி, அவை யெல்லாமும், அவனுக்குச் செல்லுமதியான கடன்களெல்லாமும் வெவியாத்திற் பிடித்தெடுக்கத்தக்கவைகளாம்.

புறனடை: அப்படித்தான் ஆகிலும், அவ்வித கடனாளிக்கு மாறாக வந்த வெவியாத்தினது அவசியத்தொகைக்குக் காணத்தக்க அளவு போதிய அசைவுள்ள உரித்தாடப்படாத ஆதனம் ஒப்படைக்கப்பட்டதாகில், அசைவற்ற ஆதனம் யாதொன்றையும் பிடித்தெடுக்கப்படாது.

மேலும் ஒரு புறனடை: ஆயினும், பிசுக்கால் டெப்பியூற்றிப் பிசுக்கால், மாஷல் அல்லது வேறு உத்தியோகஸ்தரானவர், வெவியாத்துத் தொகைக்குக் காணத்தக்க போதியளவு வேறு ஆதனங் கிடையாதபோதொழிய, கடனாளியினதுமொரு கடனாளிக்குரிய தொழில் முயற்சியிலாவது வேளாண்மைத் தொழிலிலாவது உபயோகிக்கப்படும் அவசியமான ஆயுதங்கள் தளபாடங்கள் உபகரணங்கள் ஆடுமாடுகள் உடுபுடவைகள் என்பவற்றுள் ஒன்றையும் வெவியாத்திற் பிடித்தெடுக்கப்படாது.

33. காணிவழக்கிலே தீர்ந்த தீர்ப்பானது, எவனுக்கு மாறாகத் தீர்ப்புக்கொடுக்கப்பட்டதோ, அவனுடைய ஆட்சியிலாவது, அவன் பொருட்டாக வேறொருவனுடைய ஆட்சியிலாவது, அவ்வித வழக்குத் தொடர்ந்தபின் அந்தத் திறத்தவனால் உண்டாக்கப்பட்டதோர் உரித்துப்பற்றித் தனதென்று வாதாடும் ஒருவனுடைய ஆட்சியிலாவது உள்ள காணியைப்பற்றியதாகுமாகில்; எவனுக்கென்று அந்தக் காணி தீர்ந்ததோ அவனையாவது, அவன் தன் பொருட்டு ஒப்புக்கொள்ளும்படி நியமிக்கும் எவனொருவனையுமாவது, அக்காணியாட்சியில் விடுவதனாலும், அவசியமாகில், அக்காணியை விட்டுப் புறம்பேராக மறுக்கு மெவனொருவனையும் அப்புறப்படுத்துவதனாலும், அந்தக் காணி ஒப்புக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

34. காணிவழக்கிற் கொடுத்த தீர்ப்பானது, பயிர்ச்செய்கைக்காரர்கள், வாரக்குடிகள், அல்லது அதை ஆட்சிபண்ணும் உரிமையுடைய மற்றப்பேர்கள் என்பவர்களது ஆட்சியிலுள்ள காணியைப் பற்றியதாகுமாகில்; அந்தக் காணியிலே எல்லாருக்கும் நன்றாகத் தெரியத்தக்கதோரிடத்தில் வெவியாத்தின் கொப்பிப்பிரதியொன்றை ஒட்டிவைப்பதனாலும்; அவ்வாதனத்தைப்பற்றிய தீர்ப்பின் சாரத்தை, சில வசதியான இடங்களிலே பறையடிப்பித்தாயினும் வழக்கப்படி வேறுவகையிலாயினும், அவ்வாதனத்தை ஆட்சிபண்ணுகிறவர்களுக்கு வெளிப்படுத்துவதனாலும், அந்தக் காணியை ஒப்புக்கொடுத்தல் வேண்டும்.

35. ஆதனங் காணியாதனமாயிருந்தால், பிசுக்காலானவர் அதைப் பிடிக்கும்போது, தனக்கு மாறாகத் தீர்ப்புப்பெற்றவன் எவனோ அவன் அக்காணியை விற்பனவினாலேனும் நன்கொடையினாலேனும் மற்றும் எந்த வழிவகையிலேனும் பராதீனப்படுத்தப்படாதெனவும், ஊரவரொருவரும் அக்காணியை விலையாக நன்கொடையாக மற்றும் எந்த வழிவகையாலும் வாங்கப்படாதெனவும் தடைப்படுத்துவதொரு கட்டளைப்பத்திரத்தை ஒட்டிவைத்தல் வேண்டும்.

36. பிடித்த ஆதனமானது, பொருள்பண்டங்கள் சாமான்களாயாவது, தனக்கு மாறாகத் தீர்ப்புப்பெற்றவன் எவனோ அவனுக்கு உரித்தாகிய மற்றும் அசைவுள்ள ஆதனமாயும், மற்றுமொருவன் உடனே அதை அப்போதைக்கு ஆட்சிபண்ணத்தக்க உரிமையாக அல்லது கடன்பிணையாக அமைந்ததாயுமிருக்குமாகில், அக்கடன் பிணைக்கமைந்ததாகவே அவ்வாதனத்தைப் பிடித்தெடுத்தல் வேண்டும்; அந்தக் கடன்பிணை தனக்குடையதென்று வாதாடுபவன் அவ்வாதனத்தை விட்டுப்போடக் கடமைப்பட்டவனாவன்; ஆயினும், அவன், பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது மற்றும் உத்தியோகஸ்தராவது அவ்வாதனத்தை ஆட்சியெடுத்த காரணம்பற்றித் தனக்குரிய கடன்பிணையை இழந்துவிட்டவனாகக் கொள்ளப்படமாட்டான்.

37. தனக்கு மாறாகத் தீர்ப்புப்பெற்றவன் எவனோ அவனது ஆட்சியிலிராத பொருள்பண்டங்கள் சாமான்கள் முதலிய அசைவுள்ள ஆதன விஷயத்திலாகில், கட்டளைப்பத்திரத்தைக் கோட்டுவீட்டின் எல்லாருக்குந் தெரியத்தக்கதோர் இடத்திலே ஒட்டிவைத்தல் வேண்டும்; அந்தக் கட்டளையின் கொப்பிப்பிரதி யொன்றை, அவ்வாதனத்தை ஆட்சிபண்ணி வருகிறவனுக்குக் கொடுப்பித்தல் வேண்டும், அல்லது தபால்மார்க்கமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

காணியாதன விஷயத்திலாகில், கட்டளைப்பத்திரத்தை அவ்வித காணிகள் வீடுகள் அல்லது மற்றும் ஆதனத்தின் ஓரிடத்திலேயாவது அருகிலாவது பெலமாக வாசித்துவிடல் வேண்டும்; அதன் கொப்பிப்பிரதிகளை அக்காணியிலுங் கோட்டுவீட்டிலும் எல்லாருக்குந் தெரியத்தக்க இடத்தில் ஒட்டிவைத்தல் வேண்டும்.

கடன் விஷயத்திலாகில், கட்டளைப்பத்திரத்தைக் கோட்டுவீட்டின் எல்லார்க்குந் தெரியத்தக்க இடத்தில் ஒட்டிவைத்தல் வேண்டும்; அதன் கொப்பிப்பிரதிகளைக் கடனாளி யொவ்வொருவனுக்குங் கொடுப்பித்தல் வேண்டும்; அல்லது தபால்மார்க்கமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

38. யாதாயினுமோர் ஆதனம் வெளியாத்தில் முறைப்படி பிடிக்கப்பட்டதன் பின்னும்; கட்டளைப் பத்திரத்திற் பிடிக்கப்பட்டதாகில், முன்சொல்லிய விதமாக முறைப்படி அறிவித்துத் தெரிவிக்கப்பட்டதன் பின்னும்; (பிசுக்காலால் ஆவது டெப்பியூற்றிப் பிசுக்காலால் ஆவது அல்லது இதன்பின் ஏற்படுத்தியபடி அவர்கள் கட்டளைப்படியுமாவது செய்வதல்லாமல), விற்பனவு, நன்கொடை, ஈடு, ஒற்றி என்னும் எவ்விதத்திலுமாவது வேறு விதத்திலுமாவது, பிடிபட்ட ஆதனத்தை எவ்வொரு பராதீனப்படுத்தலும் அல்லது பாரிக்கப்படுத்தலும்; பிடிபட்டிருக்கிற காலத்தில் அக்கடனை அல்லது கடன்களைத் தனக்குமாறாகத் தீர்ப்புப்பெற்றவன் கொடுத்தலுமாகிய செய்கைகள் செல்லுபடியற்றதாயும் வெறுமையாயுமிருக்கும்.

39. கடன்பட்டவன் தனது கடனைத் தனக்குக் கடன் கொடுத்தவனிடத்தே கொடுக்கப்படாதென்று தடுக்கப்பட்ட ஒவ்வொரு காரியத்திலும், அவன் அத்தொகையைப் பிசுக்காலிடத்தாவது டெப்பியூற்றிப் பிசுக்காலிடத்தாவது கொடுக்கலாம்; அவ்விதமாகக் கொடுத்தது அந்தக் கடன்கொடுத்தவனிடத்தே கொடுத்தாற்போன்ற பயனுடையதாகவே இருக்கும்.

40. பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது வேறு உத்தியோகஸ்தராவது யாதாயினுமோர் ஆதனத்தைப் பிடித்தெடுத்தவுடனே, அவ்வித ஆதனத்தின் டாப்பு நாமாவலியொன்றை உடன்தானே எழுதி அதற்குத் தாமாவது ஆதனம் பிடித்தெடுத்தவராவது கையொப்பமிட்டு, பிடிபட்ட ஆதனம் எவர் வசத்திலிருந்ததோ அவரிடத்தாவது, அல்லது ஒருவர் வசத்தும் இருந்ததல்லவாகில், அந்தப் பகுதித் தலைமைக்காரனிடத்துமாவது கொஸ்தாப்பவிடத்துமாவது ஒப்புவித்தல் வேண்டும்; இன்னும் அந்த டாப்பு நாமாவலிக் கொப்பிப் பிரதிகளைப் பிசுக்கால் கந்தோரிலும் வைக்கப்பட்டும் வெளியாத்து மீண்டுவரும்போது அதனோடிணைக்கப்பட்டும் இருத்தல் வேண்டும்.

41. அச்சறுக்கைபண்ணிவைப்பதற்குத் தகுந்த வழிவகையில்லாத நாட்டுப்புறங்களிலே ஆதனம் பிடித்தெடுத்தால் அல்லது நடுக்கட்டினால், பிசுக்காலாவது, டெப்பியூற்றிப் பிசுக்காலாவது வேறும் உத்தியோகஸ்தராவது நடப்பிக்கவேண்டிய வகை வருமாறு:—(க) அவ்வாதனத்தை அச்சறுக்கையுள்ள ஒரு தகுந்த இடத்திற் கொண்டுபோய் வைப்பிக்கலாம்; அதற்குச்சென்ற செலவை முதன் முறையிற் கடன்காரனே பொறுத்தல் வேண்டும்; அவன் அதை அதற்கு முன்னமே இறுக்கவில்லையாகில், பிடித்தெடுத்த அல்லது நடுக்கட்டின ஆதனத்தை முதலில் விற்றுவந்த தொகையிலிருந்து கொடுத்துப்போடல் வேண்டும். (உ) அந்தப் பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது வேறும் உத்தியோகஸ்தராவது, அவ்வித ஆதனமுடையவன் அல்லது ஆட்சிக்காரனிடத்தில் விற்பனவுக்காலம்வரையும், அவன் அதைப் பத்திரமாயும் அச்சறுக்கையாயும் வைத்திருப்பதற்காகத் தமக்குத் திருப்திகரமான பிணைவாங்கிக்கொண்டு அவனுடைய பொறுப்பில் வைத்துக்கொள்ளும்படி அவனைக் கேட்கலாம். (ங) அவ்வித ஆதனமுடையவன் அல்லது ஆட்சிக்காரன் அவ்வித பிணை தரத்தவறினால், வெளியாத்தையிட்டபடி கேட்டவனிடத்தில், பிசுக்காலுக்காவது டெப்பியூற்றிப் பிசுக்காலுக்காவது வேறு உத்தியோகஸ்தருக்காவது திருப்திகரமான பிணைவாங்கிக்கொண்டு, அவனை அவ்வாதனப்பொறுப்பை ஏற்கும்படி கேட்கலாம். (ச) வெளியாத்தைத் தரும்படி கேட்டு வெளிப்படுத்துவித்த அவனைக் கேட்டபோது, அவ்வித ஆதனத்தைத் தன் பொறுப்பில் எடுக்கவாவது பிணை கொடுக்கவாவது தவறுவானாகில், பிசுக்காலாவது டெப்பியூற்றிப்பிசுக்காலாவது வேறு உத்தியோகஸ்தராவது கோட்டாருக்கு அதைப்பற்றி விசேஷ றிப்போட் அறிவித்தல் அனுப்பிவைத்தல் வேண்டும்; மேலும் அவர் அதன்பின் அவ்வித ஆதனத்துக்கு வரும் எதுங் தீங்கு கேடு நஷ்டமாகிய யாதொன்றுக்கும் பொறுப்புடையவராகமாட்டார்.

42. ஆதனம் முறைப்படி பிடித்தெடுக்கப்படுதலும், பிசுக்காலாவது அவர் டெப்பியூற்றியாகிய பிசுக்காலாவது பின்வரும் விதமாக அதனை விற்பனவாக்கத் தொடங்குதல் வேண்டும்.

(1) அசைவுள்ள ஆதனம் பிடித்தெடுத்த காரியங்களிலெல்லாம் பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது பறைசாற்றுவித்தாதல் பிரசித்தியடைவிக்கக்கூடிய மற்றெவ்வகையினாலாதல் அவ்வாதன விற்பனவின் வழக்கமான நொத்தீஸ் அறிவித்தலை விற்பனவுசெய்யுமிடம் ஆதனம் பிடித்தெடுத்த இடம் ஆகிய இரண்டிடத்திலுங் கொடுப்பித்தல்வேண்டும்: அவ்வித நொத்தீஸ் அறிவிப்பு, யாதுமொரு கோட்டுக்கட்டளைகொண்டு காலநீட்டிப்புச் செய்தாலன்றி, விற்பனவு நாளுக்குமுன்னேற மூன்று நாளைக்குக் குறையாமலும் பதினைது நாளைக்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்; இன்னும் அது, விற்கப்படும் ஆதனம், வழக்கு, இடம், நாள், மணிநேரம் இன்னது இன்னது என்று குறித்துக் காட்டுதல் வேண்டும்.

(2) அசைவற்ற ஆதனம் பிடித்தெடுத்த காரியங்களிலெல்லாம், அசைவுள்ள ஆதனங்கள் விற்பனவிலே வேண்டிய அதன மேற்சொல்லியபடியான விற்பனவு நொத்தீஸ் அறிவிப்புக்கொடுத்தல் வேண்டும்; இன்னும் பிசுக்காலாவது, டெப்பியூற்றிப் பிசுக்காலாவது வேறு உத்தியோகஸ்தராவது இங்கிலிஷிலும் அவ்வூர்ப் பகுதியில் வழங்கும் சுதேச பாஷையிலும் விற்பனவு நொத்தீஸ் அறிவிப்பு நந்நாலு கொப்பிப்பிரதிகள் பண்ணுவித்துக் கொள்ளல்வேண்டும்; அவைகளில் ஒரு பிரதியைத் தமது கந்தோரிலும் இரண்டாம் பிரதியை வெளியாத்து வெளிப்படுத்திய கிராமக் கோட்டு வீட்டிலும், மூன்றாம் பிரதியை அந்தக்காணியிருக்கிற பட்டணத்தில் அல்லது குறிச்சியில் எல்லாருங் காணக்கூடிய தோரிடத்திலும், நாலாம் பிரதியை விற்பனவுக்கான காணியாதனத்தில் எல்லார்க்குந் தெரியக்கூடிய தோரிடத்திலும் ஒட்டிவைப்பித்துக்கொள்ளல்வேண்டும். அந்தப் பிரசித்தங்கள் ஒவ்வொன்றும் அவ்வித விற்பனவு நடக்குமுன்னே குறைந்தபட்சம் பத்து நாளைக்குமுன்னே செய்திருத்தல் வேண்டும்.

43. ஒவ்வொரு விற்பனவும் பிசுக்காலது உத்தியோகஸ்தரொருவராலேனும் பிசுக்காலது அல்லது டெப்பியூற்றிப் பிசுக்காலது கைப்பட்ட எழுத்தில் முறைப்படி அதிகாரம்பெற்றுடைய வேறொருவராலேனும், நடப்பிக்கப்படுதல் வேண்டும். கடனாளிக்குரிய அசைவுள்ள ஆதன விற்பனவு மறுவிற்பனவுமாகிய ஒவ்வொன்றிலும் உள்ளபடி அறவிட்டெடுத்த தொகையில் நூற்றுக்கு மூன்று வீதமும் அசைவற்ற ஆதனவிற்பனவின் தொகையில் நூற்றுக்கு இரண்டு வீதமும் பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது சலார் வேதனங் கணக்குப்போட்டெடுத்துக் கோட்டாருக்கு அறிக்கை பண்ணுதல் வேண்டும். இந்தப் பிரிவிற்கமையக் கணக்குப்போட்டெடுத்த சலார்வேதனங்களை, தேசாதிபதியவர்கள் அதிகாரமந்திர சபையாரது ஆலோசனையோடுங் காலத்துக்குக்காலம் உத்தரவுபண்ணுகிற பிரகாரம், உபயோகித்தல் வேண்டும்.

44. அசைவுள்ள ஆதனம் அசைவற்ற ஆதனம் எதையும் கைக்காசுக்கு மாத்திரமே விற்பனவுசெய்தல் வேண்டும்.

45. அசைவற்ற ஆதனவிற்பனவிலே அதிக முயர்ந்த கேள்விக்காரனே கொள்வனவுகாரனென வெளிப்படுத்திய போது அவன் கொள்விலைப்பணத்தை உடன்கையிற்றானே இறுத்துவிடவில்லையாகில், அதற்கடுத்த உயர்ந்த கேள்விக்காரனைக் கொள்வனவுக்காரனென வெளிப்படுத்தலாம்; முன்சொன்னபடியே பணம் இறுக்கத்தவறியவன் தான் விலைகேட்ட கேள்வித்தொகைக்கும் விற்பனவிற் கடைசியாகத் தீர்ந்த தொகைக்குமுள்ள மீதித்தொகையை இறுக்கவேண்டியவனாகக் கொள்ளப்படலாம். பிசுக்காலானவர் தாம் முறையே அவர்களை எழுத்து மூலமாகக் கேட்டு ஒரு கிழமையான பின்னும் அவர்கள் அத்தொகைகளை இறுத்துவிடத் தவறுவாராகில், ஒவ்வொரு காரியத்திலுமுள்ள குறித்த மீதித் தொகையை அவ்வெளியாத்து விடுத்த கிராமக் கோட்டு நீதவானுக்கு உறுதிப்பாடுபண்ணி அறிவித்துவிடல் வேண்டும். பிசுக்கால் உறுதிப்பாடு பண்ணிய மீதித் தொகைகள், பிசுக்காலது அல்லது தீர்க்கப்பட்ட கடன் கொடுத்தோனது அல்லது தீர்க்கப்பட்ட கடனுயது கேள்விப்படி அத்தொகைகளை இறுக்கவேண்டியவர்களிடமிருந்து, ஒவ்வொரு காரியத்து

நிதரிசன பத்திரமும் கிராமக் கோட்டாரால் தீர்க்கப்பட்ட பணத்தொகைத் தீர்ப்புப்போலவே கொள்ளப்பட்டு, அறவிட்டு வாங்கத்தக்கவைகளாயிருக்கும்.

46. கிராமக்கோட்டார் வேறு வகையிற் கட்டளைபண்ணினாலன்றி, அல்லது பிசுக்காலுக்காவது டெப்பியூற்றிப் பிசுக்காலுக்காவது மனுப்பத்திரம் எழுதிக்கேட்டு இருதிறத்தவர்களும் வேறிடத்தில் விற்பனவு நடப்பிக்கலாமென்று சம்மதப்பட்டுக்கொண்டாலன்றி, அசைவற்ற ஆதனத்து விற்பனவானது அவ்விடத்திற்றானே நடப்பிக்கப்படல் வேண்டும்.

47. பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது தம்மால் நடைபெற்ற அல்லது தமது கட்டளைப்படி நடைபெற்ற அசைவற்ற ஆதன விற்பனவு ஒவ்வொன்றையும், அது நடைபெற்ற ஒரு கிழமையினுள்ளே றிப்போட் அறிவிக்கை பண்ணிவிடுதல் வேண்டும்; அந்த விற்பனவை ஒழுங்கின்மை அல்லது கிரமமின்மையாகிய காரணம்பற்றி ஆக்ஷேபிக்கிற கடனாளியாவது மற்றெவனொருவனுமாவது, விற்பனவு நடந்து முப்பது நாளையினுள்ளே அவ்வித காரணம் யாதேனும் தமக்குப் புலப்படுத்தப்பட்டால் பிசுக்காலுமாவது டெப்பியூற்றிப் பிசுக்காலுமாவது, அவ்விற்பனவைப் பெலப்படுத்தப்படாதென்பதற்குள்ள ஆக்ஷேபங்களைக் கிராமக் கோட்டாருக்குச் சொல்லுவது அல்லது றிப்போட் அறிவிக்கைபண்ணுவது செய்யத்தக்கதாயிருக்கும். அந்தக் கிராமக் கோட்டாரும் அவ்வாக்ஷேபங்களைச் சுருக்கமுறைப்படி விசாரணை செய்துகொண்டு, தமக்கு நீதியெனவும் நியாயமெனவும் புலப்படுகிற பிரகாரம் அவ்விற்பனவைப் பெலப்படுத்தினும் பெலப்படுத்தலாம், விலக்கிவிடினும் விலக்கிவிடலாம் (G அக்ஷரமிட்ட மாதிரிப்பத்திரம்). ஆயினும், விற்பனவை பிரசித்தப்படுத்தினதிலாவது நடத்தினதிலாவது முக்கியமான ஒழுங்கீனம் அல்லது கிரமமின்மை உண்டென்று கண்டுகொண்டாலன்றியும், அவ்வித கிரமமின்மை காரணமாக மனுக்காரனுக்குப் பெருத்த நஷ்டம் உண்டாயிருந்தாலன்றியும், யாதொரு விற்பனவும் விலக்கப்படாதிருத்தல் வேண்டும். பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது, கிராமக்கோட்டார் தமக்குக் கொடுக்கும் உத்தரவுகளின் பிரகாரம் அறுதிச்சாதனத்தைக் கொடுக்கினுங் கொடுக்கலாம், அல்லது சில காலத்துக்காகவாவது முற்றுமாகவாவது கொடாமல் வைத்துக்கொள்ளினுங் கொள்ளலாம்.

48. மேற்போந்த பிரிவில் நியமித்தபடி முப்பது நாளையினுள்ளே ஆக்ஷேபிக்கப்படாத ஒழுங்கின்மை அல்லது கிரமமின்மையென்னுங் காரணம்பற்றி யாதொரு விற்பனவும் சரியின்மையென்று கொள்ளப்படமாட்டாது.

49. கிராமக்கோட்டார் விற்பனவை அமிசக்குமில்லை, கொள்விலைக்காரன் கொள்விலைப்பணத்தையும் இறுத்துவிட்டு, தான் விலைக்குவாங்கின காணிக்கு அறுதிச்சாதனம் முடிக்கச் சட்டப்படி வேண்டிய சரியான தொகைக்கு (அவன் கொள்விலைப்பணம் முழுதும் இறுக்கப் போகாத வாங்கிக்கொடுக்கக் கடமைப்பட்ட) முத்திரைகளை வாங்கித் தந்துவிட்டான் என்றும்; பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது, இதனுடன் அணைத்திருக்கும் அட்டவணையில் H அக்ஷரமிட்ட மாதிரிப்பத்திரத்தின்படி அவ்வாதனத்துக்கு அறுதிச்சாதனத்தை இரண்டு பிரதிகளாக எழுதி முடித்துக்கொள்ளல் வேண்டும்; அந்தச் சாதனம் நொத்தாரிசு முன்னிலையில் முடிக்கப்படவில்லையென்றாலும், கட்டுப்பாடுடையதாயும் பெலப்புடையதாயுமிருக்கும். பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது மூலப்பிரதியைக் கொள்விலைக்காரனிடங் கொடுத்தல் வேண்டும்; இன்னும் அவர் நொத்தாரிசுமார் முன்னிலையில் முடிந்த உறுதிகள் விஷயத்தில் இப்போது செய்யுமாறுபோலவே அல்லது இனிமேற்செய்யவேண்டிய வாறுபோலவே, அந்தக் காணி இருக்கும் டிஸ்திறிக் பிரிவுக் காணிப்பதிவு காரியஸ்தரிடத்தில் உறுதியின் இணைப்பிரதியை அனுப்பிவைத்தல் வேண்டும். பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது அவ்விதம் அறுதிச்சாதனம் முடித்துக்கொடுத்தற்காக ஐம்பது சதம் சலார் வேதனம் வாங்கும் உரித்துடையராவர்; அவ்வித சலார் வேதனமும் மேசாதிபதியவர்கள் உத்தரவுபண்ணுகிறபடி உபயோகிக்கப்படல் வேண்டும்.

50. அந்தக் காணியிடத்தைக் குறிப்பதொரு கீற்றுப்படமேனும் அளவுப்படமேனுஞ் செய்து, பிசுக்கால் முடித்துக்கொடுக்கும் அறுதிச்சாதனத்தோடு சேர்த்தணைத்துக்கொள்ளல் வேண்டும்; கொள்விலைக்காரன் அதற்கு வேண்டப்படுஞ் செலவு முழுதையும் அறுதிச்சாதனத்துக்கு நியமித்த சலார் வேதனத்தோடு சேர்த்து முன்னேற இறுத்துவிடல் வேண்டும்.

51. ஆதனம் விற்பனவாக்கும் வெலியாத்துக்குரிய கோட்டுத் தீர்ப்பைப் பெற்றுவைத்திருப்பவன், கோட்டாரது அனுமதியை முன்னேறப் பெற்றுக்கொண்டு, அவ்வாதனத்துக்கு விலைவைத்துக் கேட்கலுமாம் அல்லது விலைக்கு வாங்கலுமாம்.

52. வெலியாத்து முடித்துத் தரும்படிவேண்டி அதை விடுத்தவன், விற்பனவாக்கிய ஆதனத்தில், ஏதொன்றையுந் தானே விலைக்குவாங்கச்சம்பவித்தால், கொள்விலைப் பணத்தொகையை அவனது உரித்துத்தொகையிற் கழித்துக்கொள்ள உத்தரவுபண்ணல் வேண்டும். கொள்விலைத்தொகை உரித்துத்தொகையினும் அதிகப்பட்ட தொகையாகில் கோட்டார் வேறுவகையில் உத்தரவுபண்ணினாலொழிய, மீதித்தொகையைமட்டும் இறுக்கும்படி அவனைக் கேட்டல் வேண்டும். எப்படியென்றாலும், அவ்வித காரியம் யாதொன்றிலும் அவ்வாதனத்தைப்பற்றிய அறுதிச்சாதனம், கிராமக் கோட்டாருடைய திட்டமான உத்தரவுபெற்றன்றி, முடிக்கப்படாதிருத்தல் வேண்டும். பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது வேறு உத்தியோகஸ்தராவது, அப்படி உத்தரவுபண்ணப்பட்ட தொகை உள்ளபடியே கோட்டிற் கட்டப்பட்டதாகக்கொண்டு, அவ்விற்பனவிற் சலார்வேதனம் வாங்கும் உரித்துடையவராவர்.

### பிடித்தெடுத்த ஆதனத்துக்கு உரித்தாடுதல்.

53. கோட்டுத் தீர்வை நிறைவேற்ற விட்ட வெலியாத்திற் பிடித்தெடுத்த யாதும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனம் விற்பனவாக்கத்தக்கவைகளல்லவென்று சொல்லி உரித்தாடச் சம்பவித்தால், அப்படி உரித்தாடின உடனேயாவது ஆக்ஷேபம்பண்ணின உடனேயாவது, அவ்வித உரித்தாடலையேனும் ஆக்ஷேபத்தையேனும் சுருக்கமுறையில் விசாரணைபண்ணப் பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது தொடங்கல் வேண்டும்; அவ்வித உரித்தாடலாவது ஆக்ஷேபமாவது ஒவ்வொன்றும் கால நீட்டிப்பின்றி அதிசீக்கிரத்திற் செய்யப்படல் வேண்டும். உரித்தாடுபவனையும் அல்லது ஆக்ஷேபம்பண்ணுபவனையும் அவ்வழக்கின் இருதிறத்தார்களையும் அவர்கள் தம் முன்னிலையிற் கொண்டுவந்துவிடுஞ் சாட்சிக்காரர்களையும் விசாரணைபண்ணிப்பார்க்கும்பொருட்டும், அவர்களைத் தமது முன்னிலையில் வருவித்தற்கும் பத்திரங்களைக் கொண்டுவந்து காண்பித்தற்குங் கட்டாயப்படுத்தும்பொருட்டும், சுப்பீனாச் சித்தாசிகளை விடுக்கும்பொருட்டும் பிசுக்காலானவர் இதனாலே தெளிவுபெறத் தத்துவங்கொடுக்கப்பட்டிருக்கின்றார்.

54. அவ்வித அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனமானது, வெலியாத்துத் தனக்குமாறாக விடுக்கப்பட்டவனது ஆட்சியிலேனும், அவனுக்கு நம்பிக்கையில் வேறொருவனது ஆட்சியிலேனும், ஆதனம் பிடித்தெடுக்கப்பட்டபோது குத்தகையோ வாடகையோ கொடுத்தாயினும் வாரத்தொழில் செய்தாயினும் வைத்திருக்கும் பயிர்செய்கைக்காரர்களது அல்லது மறுபேர்களது அனுபவத்திலேனும் இருப்பதல்ல என்றும்; அல்லது, அக்காலத்தில் ஆதனம் அவனது ஆட்சியில் தான் இருக்கப்பெறினும், அவனது சொந்தக்கணக்காயுமல்ல, அவனது சொந்த ஆதனமுமாயல்ல, ஆயின் வேறொருவருடைய கணக்கிலும் அல்லது நம்பிக்கையிலும் வைத்திருக்கிறதென்றும், பிசுக்காலுக்காவது டெப்பியூற்றிப் பிசுக்காலுக்காவது திருப்திகரமாகக் காணப்படின், அவர் தாம் அவ்வாதனப் பிடித்தெடுப்பையாவது விற்பனவையாவது நடத்தாமல் நிறுத்திவிடல் வேண்டும். ஆயினும், சொல்லப்பட்ட ஆதனமானது, வெலியாத்துத் தனக்குமாறாக முடித்துவிடுக்கப்பட்டவனது ஆட்சியிலேனும், வேறொருவன் பொருட்டாயன்றி அவனது சொந்தமாயே இருப்பதென்றும்; அல்லது அவனுக்கு நம்பிக்கையில் வேறொருவனது ஆட்சியிலேனும், ஆதனம் பிடித்தெடுக்கும்போது குத்தகையோ வாடகையோ கொடுத்தாயினும் வாரத்தொழில் செய்தாயினுமிருக்கும் பயிர்ச்செய்கைக்காரர்களது அல்லது வேறு பேர்களது அனுபவத்திலேனும் இருக்கிறதென்றும், பிசுக்காலுக்குத் திருப்திகரமாகக் காணப்பட்டால், அவர் தாம் கேட்கப்பட்டதாகிய அவ்வுரித்தைத் தள்ளிப்போட்டு, ஆதனப் பிடித்தெடுப்பையும் விற்பனவையும் நடத்துதல் வேண்டும்.

புறனடை: எப்படியானாலும், அவ்விதமான பிடித்தெடுப்பையாதல் விற்பனவையாதல் நடத்தாது விடுதற்கு முன்னாவது, அவ்விதமான பிடித்தெடுப்பையாதல் விற்பனவையாதல் நடத்த முன்னாவது, வெலியாத்தை ஒப்பேற்றிவிடுவதினாலேனும் ஒப்பேற்றுவதினாலேனும், காரியத்துக்கேற்றபடி, நேர்ந்த யாதுமொரு கெடுதிக்காக நஷ்டத்துக்காகப் பிசுக்காலாகிய தம்மை வகைசொல்லக் கேளாதபடிக்கும் பொறுப்பாளியாகக்கொள்ளாதபடிக்கும், தமக்குப் பிணை தரும்படி, முதற் காரியத்தில் உரித்தாடுபவனையும் இரண்டாங் காரியத்தில் வெலியாத்தெடுத்துவைத்திருப்பவனையுங் கேட்பது பிசுக்காலுக்கு நியாயமுறையாயிருக்கும்.

அப்படிக் கேட்கப்பட்டோன் அவ்விதமான பிணை கொடுக்கத் தவறுவானாகில், தாம் நீதியெனக் கொள்கிறபடி, விற்பனையை நடத்தாமல் விட்டுவிடுவது அல்லது நடத்துவது பிசுக்காலுக்குத் தகுதியானதாகும்.

55. மேற்சொல்லிய விதியில் அமைந்துள்ள யாதொன்றும், ஆதனத்தைப் பிடித்தெடுக்கப்படாதென்றுவது விற்பனவுசெய்யப்படாதென்றுவது சொல்லிப் பிசுக்காலிடத்தேனும் டெப்பியூற்றிப் பிசுக்காலிடத்தேனுந் தனக்கு உரித்துண்டென்று வாதாடுமொருவனுக்கு விரோதமாக அவ்வித உரித்தை விலக்கிவைக்கும்படி ஒரு வழக்குத் தொடர்ந்து நடப்பித்தலில், வெளியாத்து எடுத்துவைத்திருப்பவனைத் தடைப்படுத்தமாட்டாது; அல்லது ஆதனத்தின் பிடித்தெடுப்பையாவது விற்பனவையாவது தடுத்தற்காக இன்ஜங்ஷன் தடைப்பாட்டுப்பத்திரந் தரும்படி தக்கதொரு கோட்டாரிடத்தே மனுக்கேட்டற்கேனும், விற்பனவுதான் முடிந்தபோதினும் அவ்வித ஆதனத்துக்குத் தனக்குள்ள உரித்தை நாட்டுவதற்காக வழக்குத் தொடர்வதற்கேனும் தனக்குள்ளதாகிய சுதந்திரத்தை எவ்வொருவனிடத்திருந்தும் அது எடுத்துவிடவுமாட்டாது. ஆயினுந்தான், அவ்வித விற்பனவைத் தடுத்துத்தரும்படி முதன் முறையிலே பிசுக்காலிடம் மனுக்கேட்டிருந்தானென்று திருப்திப்படுக்கொண்டாலேயன்றியும், அவ்வித இன்ஜங்ஷன் தடைப்பாட்டுப் பத்திரம் விடுக்கப்படில் அதுபற்றிவிளையக்கூடிய யாதேனுங் கெடுதிக்காதல் நஷ்டத்துக்காதல் பொறுப்பாகப் போதியபிணை அவன் தந்தாலேயன்றியும் அவ்விதத் தடைப்பாட்டுப்பத்திரம் முடித்துவிடுப்பது அந்தக் கோட்டாருக்கு நியாயமுறையாக மாட்டாது.

56. இவ்விதிகளின் பிரகாரம் உரித்துவிசாரணைபண்ணுங் காரியம் ஒவ்வொன்றிலும், பிசுக்காலானவர் அவ்வுரித்தினது விவரங்களைத் தமக்கு எழுத்திலே தரும்படி செய்வித்தல் வேண்டும்; இன்னும் அவர், தாம் பெறுகிற வாய்மொழிச்சாட்சியம் எழுத்துச் சாட்சியம் என்பனவற்றையும், அந்தச் சாட்சியங்கொண்டு தாங் கண்டுகொண்ட உண்மைச் சங்கதிகளின் தீர்ப்பையும் எழுதிக் குறிப்புக்கள்செய்துகொள்ளல் வேண்டும்; மேலும், அவ்வித எழுத்திற்பெற்ற உரித்துக்களையுங் குறிப்புக்களையுமெல்லாம் வெளியாத்துவிட்ட கோட்டாருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

57. பிசுக்காலாவது டெப்பியூற்றிப்பிசுக்காலாவது தாம் நடாத்திய உரித்து விசாரணையினது பயனாக, பிடித்தெடுத்திருந்ததை விடுதலையாக்கிவிட்ட யாதுமோர் ஆதனத்தைக் குறித்த இக்காரியமொன்றிலே தீர்ப்புப்பெற்ற கடன்கொடுத்தோனுக்கும், பிடித்தெடுத்துவைத்திருந்த யாதுமோர் ஆதனத்தைக் குறித்த மற்ற இக்காரியமொன்றிலே அவ்வாதனத்துக்கு உரித்தாளனுக்கும், நஷ்டத்துக்குப் பொறுப்பாளியாக மாட்டார்; ஆயினுந்தான், அவ்வித விசாரணை விஷயத்தில் பிசுக்காலாவது டெப்பியூற்றிப் பிசுக்காலாவது கபடம், முழுக்கவலையீனம், முற்றுமொழுங்கின்மை, வழக்கமான சாக்கிரதை சிறிதுமின்மை, அதிகார அபாவனை என்பனவற்றுள் யாதேனுஞ் செய்த குற்றமுடையரென்று தாபிக்கப்படுமிடத்தில, அவர் அவ்வித நஷ்டத்திற்குப் பொறுப்பாளியாகத்தான் வேண்டும்.

58. விற்பனவாக்கப்பட்ட ஆதனமானது, தீர்க்கப்பட்ட கடனாளியுடைய ஆட்சியிலாவது; அவனுக்காக இன்னொருவனுடைய ஆட்சியிலாவது; அவ்வித ஆதனம் பிடிபட்டபின் அந்தத் தீர்க்கப்பட்ட கடனாளியால் உண்டாக்கப்பட்டதாயும், அதற்கான அறுதிச்சாதனம் சகூம் பிரிவின்படி கொள்வனவுக்காரனுக்குச் செய்துகொடுக்கப்பட்டதாயும், உள்ள உரித்தைக்கொண்டு தன்னுடையதென்று வாதாடும் ஒருவனுடைய ஆட்சியிலாவது இருக்கிறபோது, கொள்வனவுகாரனுடைய மனுக்கேள்விப்படி, அவனையாவது அவன் தனக்காக ஏற்று ஒப்புக்கொள்ளும்படி நியமிக்கும் எவனொருவனையுமாவது, அவ்வாதனத்தின் ஆட்சியில் விடுவதனாலும், அவசியமாகில், அதைவிட்டுப்போட்டு புறம்போக மறுக்கும் எவனொருவனையும் அப்புறப்படுத்திவிடுவதனாலும் அந்தக் காணியை ஒப்புக்கொடுக்கும்படி கிராமக்கோட்டார் கட்டளைபண்ணுதல் வேண்டும்.

---

## மாதிரிப்பத்திரங்களின் அட்டவணை.

### A. சம்மன்ஸ் சித்தாசி ஆகிய அழைப்புக்கட்டளை மாதிரிப் பத்திரம்.

(கிராமக்கோடு, வழக்கின் இலக்கம் வழக்காளி, எதிரிகளின் பெயர்).
